Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
C.C .249 / 20 20 Pw-2

Name -பாஸ்கரன்

Father Name -கிருஷ்ணமூர்த்தி

Village - புத்தகரம்

Taluk -

Religion -

Age - 45

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.12.2021

முதல் விசாரணை

நான் தற்போது புத்தகரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது எலக்ட்ரிஷனாக பணியாற்றி வருகிறேன். ஆ.சா 1 என் மனைவி. ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும்,. அவர்கள் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள். எதிரிகள் எங்கள் தெரு ரோட்டை ஆக்கிரமித்து, வண்டி ஏற்றுவதற்கு ஏதுவாக சுமார் 1-1/2 மீ. அகலத்திற்கு படிக்கட்டினார்கள். நான் அது தொடர்பாக நான் பி.டி-ஓ அலுவலத்திலும், கோட்டாட்சியர் அலுவலத்திலும், வட்டாட்சியர் அலுவலத்திலும் புகார் அளித்தேன். பின்னர் , 23.03.2017 ம் தேதி கிராம நிர்வாக அலுவலர் வந்த பார்வையிட்டார். பின்னர் காவல் துறையை சேர்ந்த இரண்டு நபர்களும் வந்தார்கள். பிறகு அந்த படியில் ஒரு அடியை இடித்து விட்டார்கள் . அன்று இரவு சுமார் 7.30 மணி அளவில் நான் , என் அப்பா, அம்மா, மனைவி இருந்தபோது ஆஜர் எதிரியின் மகன் ஏழுமலை என்பவர் அவரது இருசக்கர வாகனத்தை எங்கள் வீட்டு முன்பு குறுக்காக போட்டு நிறுத்திவிட்டார். ஆஜர் எதிரிகள் என்னை வெளியே வாடா தெவிடியா பையா என்று அசிங்கமாக திட்டினார்கள். பின்னர் ஆஜர் 1ம் எதிரி என்னை கடப்பாறையால் குத்தி கொன்று விடுவேன் என்று அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்தார். பின்னர் நான் ந.பி பெற்றால் காவல் நிலையத்தில் போன் மூலம் தகவல் தெரிவித்தேன். பின்னர், போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். பின்பும் எதிரிகள் மீது மறுநாள் காலை என் மனைவி புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

எனக்கும் எதிரிகளுக்கும், எதிரிகள் வீட்டில் படிக்கட்டியதால்தான் பிரச்சனை என்றால் சரிதான். எங்கள் தெருவில் சுமார் 4, 5 நபர்கள் பொது இடத்தை ஆக்கிரமித்து சுமார் 7 வருடங்களாக பொது இடத்தில் படிக்கட்டி இருந்தார்கள். அதை பொறுத்து அனைவர் மீதும் புகார் அளித்துள்ளேன். எங்கள் தெருவில் வசிக்கும் வள்ளியம்மாள் என்பவர் ரோட்டின் நடுவே கழிவறை கட்டியிருந்தார். எங்கள் தெருவில் லாரி , டிரேக்டர் செல்லும் அளவிற்கு வழி உள்ளது என்றால் சரிதான். நான் பதிவு தபால் மூலம் புகார் அனுப்பினேன். நேராக சென்று கோட்டாட்சியர் அலுவலத்தில் புகார் அளிக்கவில்லை. என் மணைவி முதல் விசாரணையில் நான் நேரடியாக சென்று கோட்டாட்சியர் அலுவலத்தில் புகார் அளித்திருந்திருந்தாக கூறினால் தவறு . நான் பி.டிஓ அலுவலத்திற்கு மட்டும் நேரடியாக சென்று புகார் அளித்திருந்தேன். இந்த வழக்கில் சம்பவ இட்த்தில் இருந்து என் தாய் தந்தையரை சாட்சிகளாக நான் சேர்க்கவில்லை. இவ்வழக்கு புகாரை என் மணைவி கொடுத்தார். நானும் மற்ற ரிப்போட்டர்களும் உடன் சென்றோம். போலிசார் என்னை தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் ஏதும் வாங்கவில்லை. சம்பவத்தன்று சம்பவ இடத்திற்கு கிராம நிர்வாக அலுவவலர் இருந்தரா? என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் ஊரில் இல்லாத சமயத்தில் அவரது வீட்டு படிக்கட்டை இடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான்தான், ஆஜர் எதிரிகளை அசிங்கமாக திட்டி , கொலை மிரட்டல் விடுத்துவிட்டு நான் எதிரிகள் மீது தற்போது தவறாக என் மணைவி கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மணைவி பத்திரிக்கையில் இருப்பதால் அவர் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது தவறாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down before/me in Open
Court and read over/interpreted to
the witness and acknowledged by
him/her to be correct.
Judicial Magistrate, Gingee.